(பதிப்புரிமையுடையது)

உ

சிவமயம்



விவேகானந்த சபை கொழும்பு

அகில இலங்கை



9 சைவசமய பாடப்பரீட்சை : 2022

தரம் ஒன்பது

nselva.com

காலம் அளவு	2.00 மணி

புள்ளிகள் : 100

இல.	
மாணவர் சுட்டெண்:	

எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. பகுதி ஒன்றிற்கு இத்தாளிலேயே விடை எழுதுக.

பகுதி - I

1. மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.

1. சிவப்பெருமானது முடியைக் கண்டதாக பிரம்மாவிற்கு சார்பாக பொய்ச் சாட்சி சொன்ன பூ எது?
   1) தாமரைப்பூ 2) தாழம்பூ 3) கொன்றைப்பூ 4) துளசிப்பூ
2. திருக்கார்த்திகை விளக்கீட்டு விழா மிகச்சிறப்பாக நடைபெறும் திருத்தலம் எது?
   1) திருவண்ணாமலை 2) திருப்பூங்குன்றம்
   3) தஞ்சைப்பெரிய கோவில் 4) சபரிமலை
3. அகழ்வாரைத் தாங்கும் நிலம்போல..... என்ற குறள் வலியுறுத்தும் விழுமியப் பண்பு எது?
   1) சத்தியம் 2) அமைதி 3) சகிப்புத்தன்மை 4) புரிந்துணர்வு
4. துஞ்சலும் துஞ்சல் இல்லாத போழ்தினும் என்ற தேவாரம் சம்பந்தரால் பாடப்பட்ட சந்தர்ப்பம் எது?
   1) ஞானப்பால் உண்டபோது 2) உபநயனம் நடைபெற்ற போது
   3) அப்பரைச் சந்தித்த போது 4) சோதியிற் கலந்த போது
5. வெண்டாமரைப்பூவில் வீற்றிருப்பவர் யார்?
   1) சரஸ்வதி 2) இலக்குமி 3) துர்க்கா 4) பிரம்மா
6. பஞ்சாங்கம் என்பது எதனை அடிப்படையாகக் கொண்ட அட்டவணையாகும்?
   1) வானியல் அடிப்படை 2) விரத அடிப்படை
   3) சூரிய, சந்திர அடிப்படை 4) கிரியை அடிப்படை
7. ஐந்தாம் குரவர் எனப் போற்றப்படுபவர் யார்?
   1) அருணாசல தேசிகர் 2) இராமகிருஷ்ணர்
   3) விவேகானந்தர் 4) ஆறுமுகநாவலர்
8. யாகத்தில் சொரியப்படும் ஆகுதிகளை தேவர்களிடம் சேர்ப்பிப்பவர் யார்?
   1) இந்திரன் 2) அக்கினி தேவர் 3) வருண பகவான் 4) சண்டேசுவரர்
9. அம்பிகைக்கு உகந்த தினமாகக் கருதப்படுவது எது?
   1) சித்திரை சதயம் 2) ஆவணி ஞாயிறு
   3) ஆடிப்பூரம் 4) வைகாசி விசாகம்
10. திருக்காப்பு கட்டும் நிகழ்வு இடம்பெறும் விரதம் எது?
    1) நவராத்திரி விரதம் 2) கேதாரகௌரி விரதம்
    3) ஆடிப்பூர விரதம் 4) ஆவணிச் சதுர்த்தி விரதம்

11. “உத்தராயண ஆரம்பத்தில் நாம் கொண்டாடும் பண்டிகை எது?
1) தீபாவளி 2) ஆடிப்பிறப்பு 3) புத்தாண்டு 4) பொங்கல் விழா

12. ஆண்டாள் நாச்சியார் பின்வரும் ஆழ்வார்களில் யாருடைய வளர்ப்பு மகள்?
1) குலசேகர ஆழ்வார் 2) மதுரகவியாழ்வார்
3) திருப்பாணாழ்வார் 4) பெரியாழ்வார்

13. பதிகம் பாடும் மரபின் முன்னோடியாகக் கருதப்படும் பெண்ணடியார் யார்?
1) காரைக்கால் அம்மையார் 2) திலகவதியார்
3) ஆண்டாள் 4) மங்கையற்கரசியார்

14. “அன்பே சிவம்” என்ற கூற்று இடம்பெற்றிருப்பது
1) திருமந்திரம் 2. தேவாரங்கள் 3) பாசுரங்கள் 4) சிவபுராணம்

15. நாலாயிரத் திவ்ய பிரபந்தத்தை பாடியவர்கள் யார்?
1) நாயன்மார்கள் 2) ஆழ்வார்கள் 3) சமணர்கள் 4) சந்தானகுரவர்கள்

16. பின்வருவோருள் சரிய நெறி நின்று இறைவனை அடையாதவர் யார்?
1) நமிநந்தியடிகள் 2) குங்கிலியக் கலயநாயனார்
3) தண்டியடிகள் 4) சுந்தரமூர்த்தி நாயனார்

17. சண்டேசுர நாயனார் எந்நெறி நின்று இறைவனை வழிபட்டு முத்தியடைந்தார்?
1) சரியை 2) கிரியை 3) யோகம் 4) ஞானம்

18. இறந்த தந்தைக்கு பிதிர்கடன் செய்யும் காலம் எது?
1) சித்திரா பௌர்ணமி 2) புரட்டாதிச்சனி
3) ஆவணி ஞாயிறு 4) ஆடி அமாவாசை

19. மங்கையர்கரசியாரை “மங்கையர்க்கு தனி அரசி” என்று போற்றியவர் யார்?
1) சம்பந்தர் 2) சேக்கிழார்
3) மணிமுடிச்சோழன் 4) நெடுமாறன்

20. திருப்புகழ் எக்கடவுளின் புகழைப் பாடுகிறது?
1) சிவன் 2) முருகன் 3) விநாயகர் 4) விஷ்ணு

21. நட்சத்திரங்கள் எத்தனை?
1) 60 2) 14 3) 27 4) 30

22. தென்புலத்தார் என்று போற்றப்படுபவர்கள் யாவர்?
1) சிவனடியார்கள் 2) இறந்துபோன மூதாதையர்கள்
3) இந்திரனும் தேவர்களும் 4) தென்திசை நோக்கிய தெய்வங்கள்

23. பின்வரும் நாயன்மார்களுள் கைலைக் காட்சிக்காக பாதயாத்திரை மேற்கொண்டவர் யார்?
1) மங்கையற்கரசியார் 2) திருநாவுக்கரசர்
3) சுந்தரமூர்த்தி நாயனார் 4) சேரமான் பெருமாள்

24. ஐயப்ப பக்தர்கள் எத்தனை நாள் விரதமிருந்து சபரிமலைக்கு செல்வார்கள்?
1) 21 2) 31 3) 41 4) 11

25. யாழ்ப்பாணத்தில் கதிர்காம பாத யாத்திரை ஆரம்பிக்கும் இடம் எது?
1) நல்லூர் கந்தசுவாமி கோயில் 2) மாவிட்டபுரம் கந்தசாமி கோயில்
3) செல்லச்சந்நிதி முருகன் ஆலயம் 4) வற்றாப்பளை கண்ணகை ஆலயம்

26. திருப்பாண்டிக் கொடுமுடியில் உள்ள இறைவியின் பெயர் என்ன?
1) பண்மொழியம்மை 2) மாதுமை அம்மாள் 3) அங்கயற்கண்ணி 4) கௌரியம்மாள்

27. அட்டயோகத்தினுள் அடங்காதது எது?

1) ஆசனம் 2) தாரணை 3) நியமம் 4) சாமம்

28. நமது புராண மரபின்படி பூமியில் ஒருவருடம் தேவர்களுக்கு

1) ஒரு பகல் 2) ஆறு மாதம் 3) ஒரு மாதம் 4) ஒருநாள்

29, 30 வரையான கேள்விகளுக்கு அட்டவணையை அடிப்படையாகக் கொண்டு சரியான விடையை தெரிவு செய்க.

A - திருநாவுகரசர்	**E** - வளர்ப்பு மகள்	I - வீதி விடங்கன்
B - பெரியாழ்வார்	**F** - மகள்	**J** - திலகவதியார்
C - சுந்தரமூர்த்தி நாயனார்	**G** - தமக்கை	**K** - பரவையார்
D - மனுநீதி கண்ட சோழன்	**H** - மனைவி	**L** - ஆண்டாள்

29. சரியைத் தொண்டு செய்து இறைவனடி சேர்ந்தவர்

1) BFI 2) CHK 3) AGJ 4) DEL

30. சூடிக் கொடுத்த சுடர்க்கொடி என்று போற்றப்படுபவருக்கான சரியான இணைப்பு எது?

1) BEL 2) AFI 3) CHJ 4) DHL

(30x1 = 30 புள்ளிகள்**)**

பகுதி - II

ஆ. பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை தருக.

1. மார்க்கண்டேயரின் உயிரைப் பாதுகாத்த மந்திரம் எது?
2. நமது நாட்டில் பயன்படும் இருவகைப் பஞ்சாங்கங்களும் எவை?
3. அருணாசல தேசிகருக்கு "தேசிகர்" பட்டம் அளித்தவர் யார்?
4. "சொற்றுணை வேதியன்" என்ற தேவாரம் பாடப்பட்ட சந்தர்ப்பம் எது?
5. மணமாகாத பெண்கள் சிறப்பான மாங்கல்ய வாழ்வு வேண்டி அனுஷ்டிக்கும் விரதம் எது?
6. "ஆடிப்பிறப்பிற்கு நாளை விடுதலை" என்ற பாடலைப் பாடியவர் யார்?
7. நாலுகவிப் பெருமான் என்று புகழ்ந்துரைக்கப்பட்ட ஆழ்வார் யார்?
8. "வரிவளைக்கை மடமானி" எனப் போற்றப்பட்டவர் யார்?
9. சூரனை வதம் செய்வதற்காக முருகன் வீரவாகு தேவருடன் தங்கத் தோணியில் வந்து இறங்கிய இடம் எது?
10. தன்னுயிர் போல பிற உயிர்களையும் நேசிக்கும் பண்பினை பேணிய இரு அரசர்கள் யாவர்?
11. விருந்தோம்பலின் மேன்மையை எடுத்துக்காட்டும் பெரிய புராணத்தில் உள்ள ஒரு நாயனாரின் பெயர் தருக.

(11 புள்ளிகள்**)**

12. பின்வரும் சிவபுராணத்தில் அடுத்து வரும் நான்கு அடிகளை மட்டும் எழுதுக.
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகி.....

(04 புள்ளிகள்**)**

பகுதி - III

1. பின்வரும் திருப்பாடல்களுள் எவையேனும் இரண்டினை அடிமுறை பிழையாது எழுதுக. பாடியவரின் பெயர், பாடப்பட்ட தலம் என்பனவற்றையும் எழுதுக.

1. "செடியாய வல்வினைகள்....."
2. "ஏழிசையாய் இசைப்பயனாய் ....."
3. "பூசித்தல் வாசித்தல் ....."
4. "தோடுடைய செவியன் ....."

(2x7 =14 புள்ளிகள்**)**

2. பின்வரும் குறட்பாக்களுள் எவையேனும் ஐந்தினை எழுதுக.

1. "தீயினால் சுட்ட புண் ....."
2. "ஒழுக்கம் விழுப்பம் ....."
3. "அறன் கடை நின்றாளுள் ....."
4. "நன்றிக்கு வித்தாகும் ....."
5. "பகை பாவம் அச்சம் ....."
6. "அடக்கம் அமரளுள் ....."

(1x5 = 5 புள்ளிகள்**)**

பகுதி - IV

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

1.
1. "சமூகத்தில் உள்ள மக்களிடம் காணப்பட வேண்டிய நற்பண்புகள் இரண்டு தருக. மக்களிடம் ஒழிக்கப்பட வேண்டிய குணங்கள் இரண்டு தருக?
2. கூட்டுப் பொறுப்புடன் செயற்படுவதற்கு ஒருவரிடம் காணப்பட வேண்டிய மூன்று பண்புகள் தருக.
3. ஒருவர் சகிப்புத் தன்மையைப் பேணுவதால் இல்லாமல் போகும் தீயகுணங்கள் மூன்று தருக.

(9 புள்ளிகள்**)**

2.
1. சைவ சமயத்தவர்கள் ஓத வேண்டிய வேதங்கள் இரண்டு தருக.
2. தமிழ் வேதம் ஓதுதற்கு யோக்கியர் யாவர்?
3. தமிழ் வேதத்தை எப்படி ஓத வேண்டும்?

(9 புள்ளிகள்**)**

3.
1. நமது முன்னோர்கள் கூறிய மனித வாழ்க்கையில் நான்கு படி நிலைகளும் எவை?
2. இல்லறத்தில் வாழும் ஒருவர் செய்யும் பிதிர் வழிபாடுகள் மூன்று தருக.
3. யாகங்கள் செய்யும் போது வேத மந்திரங்கள் ஓதப்படுவது ஏன்?

(9 புள்ளிகள்**)**

4.
1. சைவ நாற்பாதங்கள் எவை? நால்வகை மார்க்கங்களும் எவை?
2. யோகத்தில் காணப்படும் எட்டு அங்கங்களில் ஏதாவது நான்கினைக் குறிப்பிடுக.
3. சரியைத் தொண்டுகள் மூன்று தருக.

(9 புள்ளிகள்**)**

5. பின்வருவனவற்றில் எவையேனும் மூன்றிற்குச் சிறுகுறிப்பு எழுதுக.

1. அருணாசல தேசிகர்
2. ஆவணிச் சதுர்த்தி
3. திருமுறைகள்
4. ஐயனார் வழிபாடு
5. மங்கையர்க்கரசி
6. விழுமியங்கள்

(9 புள்ளிகள்**)**